2017 ஜூன் 24]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 87, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். பாலசுப்பிரமணி, மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

87—

படகு குழாம்

***4276—திரு. ஆர். பாலசுப்பிரமணி:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆம்பூர் தொகுதி, நாயக்கனேரி மலைக் கிராமத்தில் படகு குழாம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) ஆம்பூர் தொகுதி, நாயக்கனேரி மலைக் கிராமத்தில் உள்ள ஏரியில் படகு குழாம் அமைக்க அரசு முன்வருமா என்று ஆம்பூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. ஆர். பாலசுப்பிரமணி அவர்கள் வினவியிருக்கிறார்கள். வேலூர் மாவட்டம், நாயக்கனேரி மலைக் கிராமம் ஆம்பூரிலிருந்து 11 கி.மீ. தொலைவில் சுமார் 25 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது. இங்குள்ள ஏரியை விடுத்து அருகில் வேறு எந்த சுற்றுலாத் தலமும் அந்தப் பகுதியிலே இல்லை. இந்தக் கிராமம் வனப் பகுதிக்கு அருகில் அமைந்துள்ளதால், சாலை பேருந்து வசதிகளும் போதுமானதாக இல்லை. எனவே, ஆம்பூர் தொகுதி, நாயக்கனேரி மலைக் கிராமத்தில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின்மூலம் படகு குழாம் அமைப்பதற்கான சாத்தியக் கூறுகள் எதுவும் தற்போது இல்லை என்பதை இந்த மாமன்றத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். பாலசுப்பிரமணி அவர்கள்.*

திரு. ஆர். பாலசுப்பிரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வங்கக் கடலோரம் சந்தனப் பேழையில் உறங்கிக் கொண்டிருக்கும், எங்களை வளர்த்து ஆளாக்கிய எங்கள் அம்மா அவர்களையும், கழக பொதுச் செயலாளர் மற்றும் துணைப் பொதுச் செயலாளர் அண்ணன் அவர்களையும் மற்றும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன். ஆம்பூர் சட்டமன்றத் தொகுதி, நாயக்கனேரி ஊராட்சியில் படகு குழாம் அமைத்துத் தர வேண்டுகிறேன். வேலூர் மாவட்டத்தில் ஆம்பூர் பெரிய நகரமாக விளங்குகிறது. இங்கு பொழுதுபோக்கு அம்சம் எதுவும் இல்லை. ஆம்பூர் நகரத்தில் அரசாங்க இடம் எதுவும் இல்லாத காரணத்தினால், நகரின் மக்கள் விடுமுறை நாட்களில் எந்தவித பொழுதுபோக்கு வசதிகளும் இல்லாமல் மன வேதனையடைகிறார்கள். அதனால், ஆம்பூர் நகரத்திற்கு அருகில் உள்ள நாயக்கனேரி மலைக் கிராமத்தில் உள்ள ஏரியில் படகு சவாரி தலம் அமைத்துக் கொடுத்தால் ஆம்பூர் மக்களும், மலைப் பகுதியைச் சேர்ந்த மக்களும் மிகவும் சந்தோஷப்படுவார்கள். எனவே, நாயக்கனேரி மலைப் பகுதியைச் சுற்றுலாத் தலமாக்க அரசு முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நன்றி.

முற்பகல் 10—50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கருத்தின்மீது வரும் காலங்களில் இப்பகுதிக்கு வருகைத் தருகின்ற சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் கூடுதல் அடிப்படை வசதிகள் தேவைப்படின் கருத்துரு மற்றும் திட்ட மதிப்பீடுகள் தொடர்பாக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் பரிந்துரையைப் பெற்று, அரசின் நிதிநிலைக்கேற்ப, மாண்புமிகு உறுப்பினர் அவர்களால் கோரப்படும் வசதிகள் அனைத்தும் செய்து தர ஆவன செய்யப்படும் என்பதனை இம்மாமன்றத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். பாலசுப்பிரமணி அவர்கள்.

2017 ஜூன் 24]

திரு. ஆர். பாலசுப்பிரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தொகுதி மக்கள் நலன் கருதி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தனி கவனத்திற்கு எடுத்துச் சென்று நான் கோரிய நாயக்கனேரி மலைப் பகுதியை சுற்றுலாத் தலமாக அமைத்துத் தருமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுடைய கோரிக்கை முழுவதுமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் பரிந்துரை, கருத்துரு மற்றும் திட்ட மதிப்பீடுகள் பெறப்பட்டு நிதிநிலைக்கேற்ப தக்கதொரு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனை இம்மாமன்றத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா அவர்கள்.

திரு. எஸ்.ஆர். இராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளச்சேரியில் 100 அடி சாலையை ஒட்டியிருக்கின்ற மிகப் பெரிய ஏரி. ஏற்கெனவே மாநகராட்சி மூலமாக அந்த ஏரியைச் சுத்தப்படுத்தி படகுக் குழாம் அமைப்பதற்குண்டான ஏற்பாடுகளெல்லாம் நடைபெற்றன. அதை சுற்றுலாத் துறை செய்யுமா என்று மாண்புமிகு வேளச்சேரி சட்டமன்ற உறுப்பினர் திரு. வாகை சந்திரசேகர் அவர்கள் என்னை கேட்கச் சொன்னார். வெளியே செல்கிறேன். வந்தால் கேளுங்கள் என்றார். (சிரிப்பு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: Proxy எல்லாம் கூடாது. உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை, உட்காருங்கள்.

வினா வரிசை எண் 88, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.